விடியல்
The Dawn
இதழ்-117, ஜனவரி - 2019

**கௌரவ ஆசிரியர்**
**முனைவர் வே. இராதாகிருஷ்ணன்**
கல்லூரி முதல்வர்
**ஆசிரியர்**
**முனைவர் சி.ரா.சுரேஷ்**
தமிழ்த்துறைத்தலைவர்
**இணையாசிரியர்**
**முனைவர் ப.பிரதீபா**
தமிழ் உதவிப்பேராசிரியர்

**ஆசிரியர் குழு**
திருமதி. சு.சாந்தி
முனைவர் கோ.இரவிச்சந்திரன்
முனைவர் ந.சங்கீதா
திரு. செ.தங்கராஜ்
முனைவர் சு.முப்பிடாதி
திரு. ந.சரவணன்
திரு ஆ.கௌரிசங்கர்
திரு. சி.கிருஷ்ணமூர்த்தி
திரு. ரா.தர்மதுரை
செல்வி. மா.சத்தியப்பிரியா
திருமதி கொ.சத்தியா
திருமதி கா.வெண்ணிலா
முனைவர் ம.சுரேஷ்
திரு க.தனபால்
திருமதி ல.வெண்ணிலா
திரு.வீ.சந்திரன்

## தியாகிகள் தினம்

எண்ணங்கள் கருத்துக்களாகவும், செயல்களாகவும் உருப்பெறும் நிலையில் எவ்வித கட்டுப்பாடுகளும், ஆதிக்கமும், முரண்பாடுகளும் இல்லாத நிலையே சுதந்திரம் என்பர். சுதந்திரம் அல்லது விடுதலை எனும் சொல்லுக்கான பொருண்மை, உணர்வை வார்த்தைகளால் வரையறுக்க இயலாது. மேலும் அவற்றை உணரும் நிலை வார்த்தைகளால் வடிக்க இயலுமெனில் முழுமையாக உணரவில்லை எனக் கூறலாம். இன்றைய நிலையில் சுதந்திரம் என்பது தான்தோன்றித் தனமாகச் செயல்படல் எனப் பலராலும் புரிந்து கொள்ளப்படுகிறது. ஒவ்வொருவரும் எவ்வித கட்டுப்பாடும், ஆதிக்கமும் இல்லாமல் செயல்பட முயல்கிறோமோ அதே அளவில் பிறரைக் கட்டுப்படுத்தவோ தம்

© K.S. Rangasamy College of Arts and Science (Autonomous)

வெளியீடு:
**தமிழ்த்துறை**
**கே.எஸ்.ரங்கசாமி கலை அறிவியல் கல்லூரி**(தன்னாட்சி)
**திருச்செங்கோடு-637 215. தமிழ்நாடு, இந்தியா.**
**Fb:** facebook.com/ksrcasthamizh.vidiyal
**Blog:** ksrcasthamizh.blogspot.in **E-mail:** vidiyalmagazhine@gmail.com
**Website:** ksrcas.edu

KSR COLLEGE OF ARTS AND SCIENCE INDIA Knowledge is Power

All rights reserved. No part of this publication may be reproduced, stored in a retrieval system or transmitted in any form or by any means electronic, mechanical, photocopying, recording or otherwise without the prior written permission of the publis

ஆதிக்கத்துள் இழுக்கவோ செய்தல் அநாகரீகம் என்பதை நம்மில் பலரும் உணர்வதில்லை. இந்நிலை களையப்படல் வேண்டும்.

இந்தியத் திருநாட்டின் சுதந்திரம் எளிமையாகக் கிடைக்கவில்லை. வணிகத்திற்காக வந்த அந்நியர்களிடம் ஏறத்தாழ 300 ஆண்டுகள் அடிமைப்பட்டு அல்லலுற்றது நம் நாடு. அடிமைத்தனம் களைய, விடுதலைக் கனலை இந்தியா முழுமையும் மக்களிடம் பரப்பினர் தலைவர்களும், கவிஞர்களும். 50 முதல் 100 ஆண்டு கால போராட்டங்களுக்குப் பிறகு விடுதலை கிடைத்தது. இக்காலகட்டத்தில் போராட்டங்களில் பங்கு பெற்ற இந்தியர் எண்ணிலடங்கா போராட்ட வீரர்களாவர். இவர்கள் விடுதலையை மட்டுமே மனதில் நிறுத்தி தடியடியும், குண்டடியும், சொல்லடிகளும் பெற்றுத் தம் உயிரையும் நீத்த தியாகிகள். இவர்களைப் போற்றும்விதமாக ஆண்டுதோறும் ஜனவரி 30 ஆம் நாள் தியாகிகள் தினம் கடைபிடிக்கப்படுகிறது.

அகிம்சைக் கொள்கையைக் கடைபிடித்து மக்கள் மனங்களில் தேசப் பிதாவாகவும், மகாத்மாவாகவும் உயர்ந்து நின்றவர் காந்தி. இந்திய தேசத்தின் தந்தையான காந்தி ஜனவரி 30 ஆம் நாள் கோட்சேவால் சுட்டுக் கொல்லப்பட்டார். தேச நலனுக்காகவே தம் இறுதிவரை பாடுபட்டு இறந்த காந்தியின் நினைவு நாள் விடுதலைக்காகப் போராடிய தியாகிகளை நினைத்துப் போற்றும் நாளாகக் கடைபிடிக்கப்பட்டு வருகிறது.

விடுதலைப் போராட்ட வீரர்கள் எனும்போது நம் நினைவுக்கு வரும் ஆளுமைகள் காந்தி, நேரு, நேதாஜி, பட்டேல், பகத்சிங், சரோஜினி ஆகியோர் தேசிய அளவிலும் தமிழக அளவில் பாளையத்துக்காரர்கள், மருதுபாண்டியர்கள், வேலுநாச்சியார், கட்டபொம்மன், பாரதியார், வ.உ.சி, சுப்ரமணிய சிவா

போன்றோராவர். இன்னும் பெயர் வெளியிடப்படாத அல்லது வெளியிட விரும்பாத போராட்ட வீரர்கள் எண்ணற்றோர் இருந்தனர். இவர்களுக்கு 'தியாகிகள்' எனும் அங்கீகாரம் வழங்கப்பட்டதா என்பது ஐயமே. தனக்கென வாழாமல் உயிர்த் தியாகம் செய்தும், உடல் உறுப்புகளை இழந்தும் நின்றோர் விடுதலை எனும் உணர்வில், களிப்பில் திளைத்தனர். ஆனால் அவர்களுக்கு அங்கீகாரம் வழங்கப்படாமலும், உதவிகள் எட்டப்படாமலும் இருப்பது இந்தியா முழுமையும் காணும் நிலையாகும். இது இந்தியாவின் சாபக்கேடு என்றே கூறலாம்.

தனக்கான அங்கீகாரம் கிடைக்கவில்லையெனினும் நாட்டுக்காகப் போராடிய மனநிறைவே போதும் என்ற உள்ளங்களைப் போற்றி வணங்குவது நம் கடமை. பெயர், முகம் தெரியாத அத்தியாகிகளின் செயல்களை, தியாகங்களை அடுத்த தலைமுறையினருக்கு எடுத்துச் சொல்வது நம் இன்றியமையாக் கடமை. இதுவே விடுதலைப் போராட்ட தியாகிகளுக்கு நாம் செலுத்தும் நன்றிக்கடன். இன்று உயிரோடு இல்லாவிடினும் என்றும் நம் நினைவில் நிலைநிறுத்திப் போற்றி வணங்குவோம். நமக்கு சுதந்திரம் எனும் பூங்கொத்துக்களை அள்ளிக் கொடுத்த தியாக உள்ளங்களை நினைத்து நன்றி பாராட்டுவோம். நாமும் பொறுப்புடன் செயல்படுவோம். நன்றி மறப்பது நன்றன்று என்ற வள்ளுவரின் வாய்மொழியைப் பின்பற்றி வளம் பெறுவோம்.

**- இணையாசிரியர்**



*தியாகிகள் தினம்*


*கவிதைகள்.......................5 – 15*

*தமிழர் கலைகள்.................15 –22*

*பெர்முடா முக்கோணம்...........22 -23*

*சிதம்பர இரகசியம்..............23 - 25*

*பொது அறிவு வினா- விடை.....25 –27*

*விடுகதை..........................27 -28*

*கவிதைகள்.......................28 -32*

# கவிதைகள்

## பழையன கழிதலும் புதியன புகுதலும்

கருது விளைஞ்ச விளை நிலமே
கொறஞ்சு போச்சு !
கல்லு முளைச்ச விளை நிலமா
எல்லாமே ஆச்சு !!
மாடுகள் எல்லாம் காணாம போகுது!
எந்திர மயமா எல்லாம் ஆகுது!!
இயற்கை மாவு
கோலமெல்லாம் முங்கிடுச்சு!
செயற்கை ஸ்டிக்கர்
கோலம் வந்துடுச்சு!!
வாழ்த்து சொல்ல
அட்டை இப்போ இல்ல!
வாட்ஸ் அப்ல எல்லாம் வந்துருச்சு மெல்ல!!
விவசாயத்துக்கு
மாட்டையும் காணோம்!
விரும்பி பார்க்க
மனுசனையும் காணோம்!!
விழாவுக்கு
அறுசுவை விருந்தோம்பல் அன்று!!
மதுபானத்தை விரும்பிக் குடிக்கிறான் இன்று!!
பழையன கழிதலும் புதியன புகுதலும்
என்பது இதுதானோ?

இறந்து கொண்டு இருக்கும்
விவசாயமும்
இன்புற்று மகிழ்ந்த
எம் தமிழர் பண்பாடும்
வாழ்த்துக்களில் மட்டுமே இன்று
வார்த்தைகளாய் வாழ்ந்து
கொண்டிருக்கிறது...

மோ.மோனிஷா
இளங்கலைத் தமிழ் இரண்டாமாண்டு

## எனது கனவுப் புத்தாண்டு

சிறு மிட்டாயொன்றை
சிரிப்போடு பறித்திட
குட்டி கைநீட்டி
குறுகுறுவென
காத்திருக்கும் ஒரு
குழந்தையைப் போல
மனசு காத்திருக்கிறது
மலரும் புத்தாண்டிற்கு...

எப்போதும் போல
இந்த வருடத்தின்
கடைசி நாள் மட்டும்
கடவுளுக்கு தானென்று
கண்டிப்பாய் ஒதுக்கி
பரம் பொருளுக்கு

நன்றி பாடல்
நிச்சயமாய் நாம்
பாடி முடித்திருப்போம்...

நிறைய சந்தோசம்
நிறைய ஆசைகள்
நிறைய கனவுகள்
நிறைய எண்ணங்கள் என
நிழலுக்கு விடைகொடுத்து
நிஜமென ஆரம்பித்தது எனது
கனவுப் புத்தாண்டு...

கு.முத்துமணி
இளங்கலைத் தமிழிலக்கியம் இரண்டாமாண்டு

## தித்திக்கும் தைப்பொங்கல்

தித்திக்கும் தைப்பொங்கல்
நம் வேர்வையையும் இரத்தத்தையும் உரமாக்கி
வெயில் குளிரில்
பாடுபட்டுக் கொண்டு வந்த
குண்டு நெல்லை
பக்குவமாய் குத்தியெடுத்து
புதுப்பானை அடுப்போடு
மஞ்சள் கரும்பு துணையோடு
புத்தாடை அணிந்து மகிழ்ந்து
சொந்த பந்தம் கலந்திணைந்து
பொங்கி வரும் பொங்கலென்று
சூரியனுக்கு வணக்கமிட்டு

சொந்தங்களுக்கு
மகிழ்ச்சியூட்டும் பொங்கல்
தித்திக்கும் பொங்கல்...

ப.பூங்கொடி
இளங்கலைத் தமிழ் முதலாமாண்டு

## பொங்கலோ பொங்கல்

மஞ்சள் குழை
மயக்கத்தில்
மந்திரப் புன்னகை
மண்பானை பொங்கல்
பொங்குதம்மா!!!

மார்கழி பிரசவத்தில்
தைப் பிறந்ததம்மா
தையல் நாயகி
அருள் கிடைத்ததம்மா !!!

ஆடிப்பட்டம் தேடி
விதைத்த விதை
பக்குவமாய்
அறுவடை ஆனதம்மா!!!

ஊழவன் வியர்வை கண்டு
கொதித்த சூரியனும்
அவன் சிரிப்பில்
பிரகாசிக்குதம்மா !!!

கூடி மகிழ்ந்து
மதம் இனம் மறந்து
பொங்கட்டும் பொங்கலம்மா!!!

வெ.மாலதி
இளங்கலைத் தமிழ் இரண்டாமாண்டு

## வேளாண்மை

சிறுபிள்ளை விதை நட்டு
தாய்ப்பாலாய் நீர் பாய்ச்சி
வகிடு எடுத்து வாரும் கணக்கு
ஏர்பூட்டி நிலம் உழுது..
நாள்தோறும் சீராட்டி அதைப் பார்த்து
மூவேளையும் பசியாற
புட்டிப்பாலாய் கால்வாய் அமர்த்தி
ஒரு துளி வளரும் வேளையில்
கண்ணோரம் துளிபுன்னகை கொண்டு
ஒழுக்கமாய் மழை பெய்து
இறுக்கமாக அன்பெனும் காற்றடித்து
மெல்லியதாய் ஒடுக்கத் துவங்கக் கண்டு
கோபம் எனும் களை களைய
என் விரலில் சிவப்பு காண
பருவங்கள் வருடங்கள் செல்லச் செல்ல
அதைக் காக்கும் பணி கூட
நிச்சயம் செய்த நாள்
நடுவில் தலை கோதி

கன்னத்தில் முத்தமிட்டு
திருமணக் கோலமாய் அறுவடை நிகழ்த்த
சீர்சனமாய் மூட்டை மூட்டையாய் கட்டி வைத்து
மாட்டு வண்டியில் அனுப்பி வைக்கும் நேரம்
மனதில் ஓரம் வேதனையும் மகிழ்ச்சியும்
இறுக்கமாய் நின்றனவே...!

வெ.மாலதி
இளங்கலைத் தமிழ் இரண்டாமாண்டு

## எனது கனவுப் புத்தாண்டு

புத்தாண்டு பிறக்கையிலே...
பொலிவு வந்து சேரயிலே...
என் புதுக் கனவு தோன்றயிலே...
அதைக் கூற வந்தேன்
நானும் இந்த வேளையிலே...
என்னவென்று சொல்வதம்மா
என் கனவுகளை...
எவர் வந்து தீர்ப்பதம்மா
என் கனவுகளை...
கண்ட கனவுகள்
கண்முன்னே தோன்ற...
எண்ணமெல்லாம் வண்ணமாய் மிளிர...
விண்ணும் மண்ணும் வளம்பெற
வருவாய் புத்தாண்டே
சோகமும் சோம்பலும் நீங்கிட

சொந்தமும் பந்தமும் கூடிட
விரைந்து வருவாய் புத்தாண்டே
ஏழ்மை நீங்கி ஏற்றம் அடைய
பாழ்நிலம் அனைத்தும்
பசுமை பொங்க
பாய்ந்து வருவாய் புத்தாண்டே...
அகவையில் மட்டுமல்ல
அறிவிலும் இளமை பொங்க...
இல்லங்கள் தோறும்
இன்பம் பெருக
இனிதே வருவாய் புத்தாண்டே...
வாடிய முகத்தில்
மகிழ்ச்சி தோன்ற
வறுமை வீட்டில் செழுமை பொங்க...
சீக்கிரம் வருவாய் புத்தாண்டே...
தலைமுறை தாண்டியும்
தமிழன் வாழ்ந்திட...
தாய்நாட்டுப் பெண்களை
தங்கமாய்ப் பேணிட
பிறப்பாய் புத்தாண்டே...
புஞ்சை நிலத்தில்
புதுப்புனல் பாய்ந்திட...
களை பறிக்கும்
களம் யாவும் கலைகட்ட...
காய் கனியாய்

பூப்பாய் புத்தாண்டே...
எண்ணிய எண்ணமெல்லாம்
ஏற்றம் பெற...
கண்ணியமான
கனவுகள் யாவும் கரையேற...
இக்கணமே பிறப்பாய்
என் இனிய புத்தாண்டே...

க.ஹ.அக்ஷயா
இளங்கலைத் தமிழ் முதலாமாண்டு

## எனது கனவுப் புத்தாண்டு

சித்திரைத் திருநாளே வருக!
எங்கள் சிந்தையில் மகிழ்ச்சிகள் பெருக
நாங்கள் முத்திரை பதித்து
வாழ்ந்திட வேண்டும்
அதற்கு முற்றிலும் முயற்சிகள்
எடுத்திட வேண்டும்
நாங்கள் நித்தமும் உழைத்து
உயர்ந்திட வேண்டும்
அந்த உயர்வால்
உலகை ஈர்த்திட வேண்டும்
சித்திரைத் திருநாளே வருக!
எங்கள் சிந்தையில் மகிழ்ச்சிகள் பெருக
உழைத்தால் மனிதனுக்கு உயர்வு உண்டு
உழைப்பவனுக்கு சமுதாயத்தில்
நல்ல பெயர் உண்டு...

விதி என்று நினைப்பவனுக்கு துன்பங்கள்
கொடுத்திடும் தொல்லை
மதியோடு வாழ்ந்தால் உனக்கு காத்திருக்கு
இன்பத்தில் எல்லை...
சித்திரைத் திருநாளே வருக!
எங்கள் சிந்தையில் மகிழ்ச்சிகள் பெருக
கதிரே நீயும் கொஞ்சம் தணிக...

ப.ஜீவிதா
இளங்கலைத் தமிழ் இரண்டாமாண்டு

## ஏறு தழுவல்

மண்ணில் உயிர்த் துளியை
படைப்பவன் தெய்வம் என்றால்
அதற்குச் சோறு போட்டு
காக்கும் விவசாயியும் தெய்வம் தான்
டைகட்டி அடுத்தவன் கிட்ட
கைகட்டி வேலை செய்து
வாழ்வதை விட
தன் சொந்த மண்ணில்
விவசாயம் செய்து
தன்மானத்தோடு வாழ்ந்திடலாம்
காலையில் எழுந்து பெட் காபி
கேட்கும் இளைஞர்களே
வெளியில் வந்து பாருங்கள்
அதிகாலையில் எழுந்து

கலப்பையை தூக்கிக் கொண்டு
விவசாயி சென்று கொண்டிருக்கின்றான்
அது அவனுக்காக இல்லை
உனக்கு சோறிடுவதற்காகத் தான்
நாம் இம்மண்ணில்
உயிர் வாழ்கிறோம் என்றால்
அதற்குக் காரணம்
விவசாயி மட்டுமல்ல
அவனின் வியர்வைத் துளிகளும் தான்
நம் நாட்டில் போகக் கூடாத
ஒரே சாயம்
அது விவசாயம் மட்டுமே
விளம்பரம் செய்து விற்கப்படும்
பொருள்களுக்கு மதிப்புண்டு
கூவிக் கூவி விற்கப்படும்
காய்கறிகளுக்கு மதிப்பில்லாமல்
போய் விடுகிறது
இன்று கீழ் நோக்கி
விதைக்கப்படும் விதைதான்
ஒரு நாள் மேல்நோக்கி
விருட்சமாய் வளரும்
அதுபோல இன்று
உங்களால் மதிக்கப்படும்
விவசாயிதான் நாளை நம் மண்ணில்
விருட்சமாய் உருவெடுக்கப்போகிறான்
என்பதை மட்டுமே
மறந்து விடாதீர்கள்...

விவசாயத்தைக் காப்போம்!!

விவசாயியை மதிப்போம்!!!

சி.வினிதா

இளங்கலைத் தமிழ் மூன்றாமாண்டு

## பொங்கல்

| | | |
|---|---|---|
| தமிழ்நாடு | - | பொங்கல் (தை பிறப்பு) |
| ஆந்திரா | - | மகரசங்கராந்தி |
| கர்நாடகம் | - | மகரசங்கராந்தி |
| அஸாம் | - | போஹாலிபிஹு |
| குஜராத் | - | உத்தராயன் |
| உத்தரபிரதேசம் | - | மகர்சக்ராத் |
| பீகார் | - | மகர்சக்ராத் |
| ராஜஸ்தான் | - | மகர்சக்ராத் |
| பஞ்சாப் | - | லொஹாரி |
| ஹரியானா | - | லொஹாரி |
| இமாச்சலப்பிரதேசம் | - | லொஹாரி |
| இலங்கை | - | புத்தாண்டு |
| நேபாளம் | - | மாகேசங்கராந்தி |
| மியான்மர் | - | திங்க்யான் |
| லாவோஸ் | - | பிமலாவோ |
| தாய்லாந்து | – | சொங்க்ரான் |

இரா.தீபா

இளங்கலைத் தமிழிலக்கியம் மூன்றாமாண்டு

# தமிழர் கலைகள்

கற்றற்கு உரியவை எல்லாம் கலைகள். உணர்ச்சியும் கற்பனையும் கொண்டு வளர்ந்த ஓவியம் முதலியவற்றை மட்டுமே கலை என்று சிறப்பித்து வழங்குதல் பொருந்தும் என்று தமிழர் மு.வரதராசனாரின் கூற்று இங்கு குறிப்பிடத்தக்கது.

**கலை வரலாறு**

'கலை' என்பது பொதுவாக காட்சிக் கலைகளின் வரலாற்றையே குறிக்கின்றது. எண்ணங்களையும் உணர்வுகளையும் பிறருக்கு நோக்குடனோ, அழகியல் நோக்கங்களுக்காகவோ, காட்சிக்குரிய வடிவத்தில் மனிதர்களால் உருவாக்கப்படும் ஒரு செய்பொருளே காட்சிக்கலை எனலாம்.

மத்திய காலத்தில் கலைகளை பல்வேறு வகையில் வகைப்படுத்தி வந்துள்ளனர். அவை தாராண்மக் கலை, இயந்திரம் சார் கலை என்ற வகைப்பாடு இருந்தது. தற்காலத்தில் நுண் கலைகள், பயன்படு கலைகள் என்ற வகைப்பாடு உள்ளது. தற்காலத்தில் மனித ஆக்கத்திறனின் வெளிப்பாடே கலை என்று வரைவிலக்கணம் கூறுகின்றனர். 20 ஆம் நூற்றாண்டில் பெரும்பாலும் கலைகளை ஒன்பதாக வகுத்தனர். 1.கட்டிடக்கலை, 2.நடனம், 3.சிற்பம், 4.இசை, 5.ஓவியம், 6.கவிதை, 7.திரைப்படம், 8.ஒளிப்படவியல், 9.வரைகதை என்பன.

**தமிழர் கலைகள்:**

சிலம்பம்

கோலாட்டம்

பட்டிமன்றம்

வில்லுப்பாட்டு

**ஆட்டங்கள்:**

**சிலம்பம்:**

சிலம்பம் என்பது ஒரு தடியடி. தமிழர் தற்காப்புக் கலை மற்றும் தமிழர்களின் வீர விளையாட்டு ஆகும். வழக்கில் இவ்விளையாட்டைக் கம்பு சுற்றுதல் என்றும் கூறுவர். குரல் அசைவுகள் மூலம் தம்மைப் பாதுகாத்து கொள்ளுதல் எனப் பல கூறுகளைக் கொண்ட விரிவான தற்காப்புக் கலை ஆகும். சிலம்பாட்டம் கற்றுக் கொள்ள ஆறு மாத காலம் தேவை. சிலம்பாட்டம் ஆடுவதற்குக் குறைந்தது இருவர் வேண்டும். திருவிழா, கோயில் விழாக்கள் மற்றும் ஊர்வலங்களில் சிலம்பாட்டம் தவறாது இடம்பெறும். இக்கலை திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி மாவட்டங்களில் பெருமளவு நடைபெற்று வருகிறது.

**சிலம்பாட்ட வகைகள்:**

துடுக்காண்டம்

குறவஞ்சி

மறக்காணம்

அலங்காரச் சிலம்பம்

போர்ச் சிலம்பம்

பனையேறி மல்லு

நாகதாளி

நாகசீறல்

கள்ளன்கம்பு

**கோலாட்டம்:**

கோலாட்டம் என்பது பல்வேறு நிறங்கள் தீட்டப்பட்ட கழிகளைக் கொண்டு தாளத்துக்கும், இசைக்கும் ஏற்ப ஒன்றுடன் ஒன்றைத் தட்டிக்கொண்டே ஆடும் ஒரு நாட்டார் கலை. கையில் கழிகளை வைத்தாடும் நாட்டார் கலை வடிவங்கள் நிறைய உண்டு.

அவற்றில் கோலாட்டம் தனிச் சிறப்புப் பெற்ற ஒன்று. பல்வேறு பகுதிகளில் கண்ணன் பிறந்த நாளன்று சமயச் சடங்காகவும் இக்கலை நிகழ்த்தப்படுகிறது. ஆரம்ப காலத்தில் இக்கலையைத் திருமணமாகாத ஆண்கள் மட்டுமே நிகழ்த்தினர். இப்போது பெண்கள் பெரும்பான்மையாக இக்கலையில் பங்கேற்கிறார்கள். இதற்கென தனி அடவுகளும் உண்டு. இக்கலை சிற்சில வேறுபாடுகளுடன் வட மாநிலங்களில் 'தாண்டியா' என்ற பெயரில் நிகழ்த்தப்படுகிறது. கோலாட்டம் மூன்று வகை வகைப்படும். அவை:

1.கோலாட்டம்

2.பின்னல் கோலாட்டம்

3.கோலாட்டக்கும்மி

**வில்லுப்பாட்டு: (வில்லிசை)**

வில்லுப்பாட்டு என்பது தமிழர் கலை வடிவங்களில் ஒன்றாகும். வில்லிசை துணை கொண்டு பாடப்படும் பாட்டு வில்லுப்பாட்டு எனப் பெயர் பெற்றது. துணை இசைக்கருவிகள் பல இருப்பினும் வில்லே இங்கு முதன்மை பெறுகிறது. துணைக் கருவிகளாகப் பயன்படுத்தப்படுபவை.

1.உடுக்கை

2.குடம்

3.தாளம்

4.கட்டை

**கும்மியாட்டம்:**

கும்மி பலர் கூடி ஆடும் ஒருவகைக் கூத்து அல்லது நடனம். இது தொன்று தொட்டு வரும் நாட்டார் கலை. பலர் வட்டமாக ஆடிக் கொண்டோ, அல்லது இருபுறமும் சரிசமமாக நின்று ஆடிக்கொண்டோ வரும் போது இசைக்குத் தக்கவாறு தன் கைகளைத் தட்டி கால்களையும் தட்டி இடுப்பையும் அசைத்து

தலையையும் அழகுற அசைத்து, குனிந்தும் நிமிர்ந்தும் கூட்டமாக ஆடும் ஒருவகைக் கூத்து. தமிழ்நாட்டிலும் கேரளத்திலும் கும்மி வழக்கில் உள்ளது. குரவை என்ற கலையில் இருந்து கும்மி பிறந்ததாகக் கூறப்படுகிறது.

**மயிலாட்டம்:**

மயில் ஆட்டம் என்பது தமிழர்களின் நாட்டார் ஆடற்கலை ஆகும். இது மயிலின் தோகையை உடையுடன் சேர்த்து ஒடுக்கியும் விரித்தும் ஆடக்கூடியவாறு உடை செய்யப்பட்டு இருக்கும். பொதுவாகப் பெண் சிறார்களே இந்த ஆட்டத்தை ஆடுவர்.

**காவடியாட்டம்:**

காவடியாட்டம் என்பது முருக வழிபாட்டுடன் தொடர்பு உடைய ஒரு ஆட்டம் ஆகும். இந்த ஆட்டத்தில் ஆடுபவர் காவடியைத் தோளில் வைத்துக் கொண்டு ஆடுவார். இலங்கையிலும், தமிழ் நாட்டிலும் தமிழர் வாழும் பிற நாடுகளிலும் உள்ள முருகன் கோயில்களில் வழிபாட்டின் ஒரு கூறாகக் காவடியாட்டம் இடம்பெறுகிறது. முருகன் கோவிலுக்குச் சென்று காவடி எடுப்பதாக பக்தர்கள் நேர்த்தி வைப்பது உண்டு. கோவில்களில் காவடி எடுப்பதில் இளவயதினரிலிருந்து பெரியவர் வரையிலான பலரும் பங்கேற்பர். வழிபாட்டின் கூறாகத் தோன்றிய காவடியாட்டம் பிற்காலத்தில் தொழில் முறை ஆட்டமாகவும் வளர்ச்சி பெற்றது.

**கொக்கலிக்கட்டை ஆட்டம்:**

கொக்கலிக்கட்டை ஆட்டத்தைக் கோக்கலிக்கட்டை ஆட்டம் என்றும் கூறுகின்றனர். உயர்ந்த குச்சியில் ஏறி அதனைக் காலாகப் பயன்படுத்தி ஆடும் ஆண்கள் நடனம். இது பயிற்சி செய்து விளையாடப்படும் ஒரு கலைத்திற ஆட்டம். கொக்கு

ஒற்றைக்காலில் நிற்பதுபோல் ஒற்றைக் கொம்பில் இருகால்களையும் ஊன்றி நின்றும் இரண்டு கால்களையும் கொக்கு பயன்படுத்திக்கொள்வது போல் இரண்டு கழிகளில் ஏறி நின்றும் இது விளையாடப்படுகிறது.

**தெருக்கூத்து:**

தெருவில் நடத்தப்படும் கூத்து தெருக்கூத்து ஆகும். தமிழர்களின் பழங்கலைகளில் ஒன்று ஆகும். கதை சொல்லல், நாடகம், ஆடல், பாடல் எனப் பலதரப்பட்ட அம்சங்கள் தெருக்கூத்தில் கலந்திருக்கும். பொதுவாக ஒரு தொன்மம், நாட்டார் கதை சீர்திருத்தக் கதை அல்லது விழிப்புணர்வுக் கதை ஒன்றை மையமாகக் கொண்டு தெருக்கூத்து நிகழும். திரைச்சீலை போன்ற நாகரீகச் சாயல்களன்றி மூன்று பக்கமும் மக்கள் சூழ்ந்த ஆடு பரப்பில், ஆடவர் மட்டுமே உடலெங்கும் மரக் கட்டைகளாலாகிய அணிகலன்களைப் பூண்டு கட்டியங்காரனால் அறிமுகப்படுத்தப்பட்டது.

**இசைக்கருவிகள்:**

ஆர்மோனியம், மத்தளம், தாளம், முகவீணை (மோர்சிங்).

**ஓயிலாட்டம்:**

ஒயிலாட்டம் என்பது ஒரே நிறத் துணியைத் தலையில் கட்டிக்கொண்டு, கையில் ஒரே நிறத்திலான துண்டு ஒன்றை வைத்து இசைக்கேற்ப வீசி ஆடும் அழகான குழு ஆட்டம். அழகு, அலங்காரம், சாயல், ஒய்யாரம் எனப் பலபொருள் தாங்கி நிற்கும் ஒயில் என்ற வார்த்தையே இவ்வாட்டத்தின் பெயராகியுள்ளது,

**பாம்பு ஆட்டம்:**

பாம்பு ஆட்டம் என்பது தமிழர் ஆடற்கலைகளில் ஒன்று. பாம்பு போன்ற வேடம் அணிந்து பாம்பின் அசைவுகளைப் போன்றும் இந்த ஆட்டம் அமைகிறது. பரத நாட்டியத்தில்

இடம்பெறும் பாம்பாட்டமும் இந்த நாட்டுப்புறக் கலையை அடிப்படையாகக் கொண்டதே ஆகும்.

**பறை ஆட்டம்:**

பறை ஆட்டம் என்பது தமிழர்களின் பாரம்பரியமான நடனம் ஆகும். பறையாட்டம் உணர்ச்சி மிக்கது. ஆவேசம், மகிழ்ச்சி, உற்சாகம் என உணர்ச்சிகளை எழுப்பி, கேட்போரை ஒரே நேர்க்கோட்டில் இணைக்கும் சக்தி வாய்ந்தது. இது பறை என்ற இசைக்கருவியை இசைத்து ஆடப்படுவதால் இது பறையாட்டம் என்று அழைக்கப்படுகிறது. இது ஒரு போர் இசைக்கருவியாகும். போர்ப்பறை என்றும் அழைப்பர்.

**கரகாட்டம்:**

கரகாட்டம் அல்லது 'கராகடம்' (கரகம்: நீர்ப் பானை நடனம்) தமிழர்களின் பாரம்பரிய ஆட்டங்களில் ஒன்று. சங்க காலத்தில் கரகாட்டம், குடக்கூத்து என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

**குறவன் குறத்தி ஆட்டம்:**

குறவர் சமூகத்தினைச் சார்ந்த ஆணான குறவனும், பெண்ணான குறத்தியும் இசைத்தபடி ஆடும் ஆட்டம் ஆகும். இசைப்பதற்கு உடும்புத் தோலால் ஆன கஞ்சிராவையோ அல்லது டால்டா டப்பாவையோ பயன்படுத்தித் தட்டிக்கொண்டு ஆடுவர். இக்கலைஞர்கள் சென்னை, திருச்சி, கடலூர், திண்டுக்கல், பழனி, சேலம், இராமநாதபுரம், திருநெல்வேலி, மதுரை ஆகிய இடங்களில் அதிகமாகக் காணப்படுகின்றனர்.

**உருமி மேளம்:**

தேவராட்டத்திற்கு பக்க பலமாக இருப்பது உருமி மேளம் மற்றும் காலில் கட்டப்படும் சலங்கை ஆகும். வரிசையாக ஒவ்வொரு 'விசில்' சத்தத்திற்கும் இடையே 'அடவு'கள் மாற்றப்படுகிறது. தேவராட்டப்பாடல்கள் தெலுங்கில் பாடப்படுகின்றன.

**ஒயிலாட்டம்:**

இதை முதலில் துவங்கும் போது உருமியை கும்பிட்டும், இறுதியில் கடவுளருக்கு நன்றி சொல்லும் 'அடவு'க்கு வரும் போது மீண்டும் மெதுவாக மாறியும் ஆட்டம் முடிகிறது. கீழே மூன்று அடவுகளின் இராகங்களைக் காணலாம்.

மு. உமாராணி

இளங்கலைத் தமிழ் மூன்றாமாண்டு

## பெர்முடா முக்கோணம்

பெர்முடா முக்கோணம் வட அட்லாண்டிக் கடலின் மேல்பகுதியில் உள்ள ஒரு தளர்வான வரையறுக்கப்பட்ட பகுதி. அங்கே நிறைய வானூர்திகளும் கப்பல்களும் மர்மமான சூழ்நிலைகளில் காணாமல் போயிருப்பதாக கூறப்படுகிறது. இந்த மறைதல்களுக்கு உலகத்திற்கு அப்பாற்பட்ட உயிர்களின் செயல்திறன் காரணமாக இருப்பதாக பொதுமக்கள் நம்புகின்றனர். இம்முக்கோணம் சாத்தானின் முக்கோணம் என்றும் அழைக்கப்படுகிறது. இம்முக்கோணப் பகுதியின் முக்கிய பிரச்சனை திசைகாட்டி மாறுதல்களாகும். இப்பகுதியில் அசாதாரணமான காந்த அலைகள் இம்மாறுதல்களுக்கு காரணமாக இருக்கலாம். என ஆய்வாளர்கள் கூறுகின்றனர். வெப்பமண்டல சூறாவளிகள் வெப்ப மண்டல கடல்பகுதியில் காணப்படும் சக்தி வாய்ந்த புயல்களாகும். இதைத் தவிர கடலின் பரப்புகளின் கீழேயுள்ள பள்ளங்களில் மீத்தேன் ஹைட்ரைட்டுகள் உள்ளதால் கடலின் அடர்த்தி குறைந்து கப்பல் மூழ்கி விடுகிறது. மேலும் கடல்பரப்பிலுள்ள வெடிப்புகளினால் முரட்டு அலைகள் உருவாகி கப்பல்களை

மூழ்கடித்துவிடுகிறது. இப்பரப்பிலுள்ள கரு மேகங்களினால் விமானங்கள் திசைமாறி சென்று அழிந்து விடுகிறது.

சிலர் இத்தகைய கப்பல்கள், விமானங்கள் மர்மமான முறையில் காணாமல் போவதை மனிதத் தவறுகளால் ஏற்பட்டிருக்கலாம் எனவும் கூறுகிறார்கள். பூமியிலுள்ள விடை தெரியாக மர்மங்களில் இதுவும் ஒன்றாகும்.

ஆ.அரவிந்த்
இளங்கலை வேதியியல் முதலாமாண்டு.

## சிதம்பர இரகசியம்

இரகசியம் என்று சொன்னவுடனே நமக்கு முதலில் ஞாபகம் வருவது சிதம்பர இரகசியம்தான். இப்பொழுது கூட யாராவது ஒரு விஷயத்தை யாரிடமும் சொல்லாமல் மூடிமூடி மறைத்தல் அது என்ன அவ்வளவு பெரிய சிதம்பர இரகசியமா? என்று கேட்கிறோம். உண்மையிலேயே சிதம்பர இரகசியம் என்றால் என்ன?

வாங்க சொல்கிறேன். நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் இப்படி பஞ்ச பூதங்களால் ஆனதுதான் நம் உலகம். இதில் நிலத்திற்குக் காரணமாக நீரும், நீருக்குக் காரணமாக நெருப்பும், நெருப்புக்குக் காரணமாக காற்றும், காற்றுக்குக் காரணமாக ஆகாயமும் இருக்கும். எல்லாவற்றிற்கும் காரணமாக இருக்கும் ஆகாயத்திற்கு காரணம் என்ன? அது தான் சிதம்பர இரகசியம்.

உலகிலேயே மிகப் பெரிய இயற்பியல் ஆய்வகம் சுவிட்சர்லாந்தில் உள்ள SURN தான். இது தன் நுழைவு வாயிலில் சிதம்பர நடராஜர் சிலையைக் கொண்டிருக்கும். பெரும்பாலான கிறித்தவர்கள் வாழும் நாட்டில் இந்த சிலையை ஏன் வைக்க வேண்டும்? இது தான் சிதம்பர இரகசியம்.

சிதம்பர நடராஜர் கோவில் அமைந்த விதம், அங்கு நடைபெறும் பூசைகள் மற்றும் நடராஜர் சிலை இது மூன்றும் தான் காலம் காலமாக இரகசியமாக போற்றப்படுகிறது. அது மட்டுமல்லாமல் சைவ சமய அன்பர்களான பஞ்சபூத சிவஸ்தலங்களான காலஹஸ்தி, காஞ்சிபுரம், திருவாணைக்கால், திருவண்ணாமலை, சிதம்பரம் இப்படி ஐந்தும் புவியியல் நிலையில் ஒரே நேர்கோட்டில் கட்டப்பட்டு உள்ளது. அறிவியல் முன்னேறாத எந்த ஒரு நவீன கருவியும் இல்லாமல் 5000 வருடங்களுக்கு முன்னால் இந்த 5 கோவிலையும் எப்படி கட்டினார்கள் என்பது இன்றளவும் விசித்திரமாகத்தான் இருக்கிறது. சிதம்பரம் நடராஜர் கோவில் மனித உடலமைப்பில் கட்டப்பட்டு இருக்கிறது. நம் உடலில் 9 துவாரங்கள் இருப்பது போல இந்த கோவிலிலும் 9 வாசல்கள் இருக்கின்றன.

நடராஜர் சன்னதி மனித இதயத்தில் வெளிப்படுத்தும் விதமாக கோவிலின் கருவறையின் இப்பாகத்திலேயே நடராஜர் சிலை அமைந்துள்ளது. நடராஜர் கருவறைக்கு மேலே சுமார் 21,600 தங்கத் தகடுகள் 65,000 தங்க ஆணிகள் கொண்டு பதிக்கப்பட்டு உள்ளன. இந்த 21,600 தங்க ஓடுகள் ஒரு நாளைக்கு ஒரு மனிதன் சராசரியாக மூச்சு விடும் எண்ணிக்கை. அதாவது ஒரு நிமிடத்திற்கு 15 வீதம் ஒரு நாளைக்கு 21,600 என கணக்கிடப்பட்டுள்ளது. 65,000 தங்க ஆணிகள் என்பது மனித உடம்பில் உள்ள நாட்களின் எண்ணிக்கை ஆகும். அது சரி ஏன் இக்கோவில் மனித உடம்பு வடிவில் கட்டப்பட்டது? இதற்கு பதில் ஆரம்பத்திலேயே பார்த்தோம்.

அனைத்திற்கும் ஆதி காரணம் ஆகாயம். மனித உடம்பிலும் ஆகாயம் உள்ளது. இதனை அம்பரம் என்று சமஸ்கிருதத்தில் சொல்லுவார்கள். இதை இதய ஆகாயம் என்று அழைப்பர்கள். அங்குதான் மூச்சாக நடராஜர் நடனமாடுகிறார். இதைத்தான்

ஆனந்த தாண்டவம் என்று சொல்வார்கள். அதுவே கோபம் வரும்போது மூச்சை கவனியுங்கள் வேகமாக வெளியேறும். இது தான் ருத்ர தாண்டவமாம். அண்டத்தில் உள்ளது தான் பிண்டத்தில் இருக்கும். இதைச் சொல்லாமல் சொல்வதுதான் நடராஜர் சிலை.

நடராஜர் சிலை பிரபஞ்சத்தின் வடிவமாக உள்ளது. அவரின் வலது கை முதல் இடது கால் வரை உள்ள வடிவம் பால்வெளி அண்டத்தின் அமைப்பை ஒத்துள்ளது. நடராஜர் இதயம் அமைந்துள்ள இடத்தில் தான் நம் சூரிய மண்டலம் உள்ளது. அவரின் இருப்பில் எந்நேரமும் சுற்றும் பாம்பு நில்லாமல் ஓடும் காலத்தைக் குறிக்கிறது. அவரைச் சுற்றியுள்ள வட்டம் நம் பூமியைக் குறிக்கிறது.

இதனால் தான் SURN என்ற நிறுவனத்தின் நுழைவு வாயிலில் பிரபஞ்சத்தின் அடையாளமாக இச்சிலை வைக்கப்பட்டுள்ளது. எல்லாவற்றிற்கும் காரணமான ஆகாயத்தை இக்கோவிலில் நடராஜராக வழிபடுகின்றனர். ஒட்டுமொத்தத்தில் இக்கோவில் பழங்கால விண்வெளி ஆராய்ச்சிக் கூடமாக இருந்திருக்கிறது.

மு.தனுஷ்கண்ணன்
இளங்கலை வேதியியல் முதலாமாண்டு

## பொது அறிவு

1. வங்கதேச நாட்டின் மிக உயரிய விருதான பங்களதே ஸவாதினாடா சாம்மானோனா விருதினை 2011 ஆம் ஆண்டு பெற்றவர் யார் ?

விடை : இந்திரா காந்தி

2. உலகின் மிகச்சிறந்த நாவல்களில் ஒன்று என நேரு குறிப்பிடுவது எது ?

விடை : டான் குவிக்ஸோட்

3. நீதிச் சங்கிலி மணி எனும் புதியதொரு நீதி வழங்கும் முறை யாருடைய ஆட்சி காலத்தில் அறிமுப்படுத்தப்பட்டது.

விடை : ஜஹாங்கீர்

4.இந்திய கடற்கரைப் பகுதிகளின் மொத்த நீளம் எவ்வளவு?

விடை : 6100 கி.மீ

5.இந்தியாவின் உள்ளாட்சி அமைப்பை ஏற்படுத்தியவர் யார் ?

விடை : ரிப்பன் பிரபு

6.முகலாயர்களின் பொற்காலம் என அழைக்கப்பட்டது யாருடைய ஆட்சிக்காலம்?

விடை : ஜஹாங்கீரின் ஆட்சிக் காலம்

7.ஆங்கிலேயர்கள் எந்த அரசரிடமிருந்து இடத்தை வாங்கி தற்கால சென்னை நகரை நிறுவினார் ?

விடை : சந்திரகிரி

8.இந்தியாவில் மாற்றிட வேளாண்மைத் தொழில் எந்தப் பெயரில் அழைக்கப்படுகிறது ?

விடை : பேவார்

9.கொல்கத்தாவில் இருக்கும் இந்தியத் தாவரவியல் தோட்டத்தில் உள்ள மிகப் பெரிய ஆலமரத்தின் வயது என்ன?

விடை : 200 ஆண்டுகள்

10. மனித இனத்திற்கு “ஒரே சமயம், ஒரே சாதி மற்றும் ஒரே கடவுள் என்ற கொள்கை தந்தவர் யார் ?

விடை : ஸ்ரீநாரயண குரு

ம.குணசேகர்
இளங்கலை தமிழ் மூன்றாமாண்டு.

# பொது அறிவு

1. புதன் கிரகத்தில் 1 நாள் என்பதற்கு பூமியில் எத்தனை நாள்களுக்குச் சமம்?

விடை : 180 நாட்கள்

2. இந்தியாவின் எந்த மாநிலத்தில் தேசிய கீதம் முதலில் பாடப்பட்டது?

விடை :கேரளா

3. சிவகாசியில் பட்டாசு தொழிற்சாலை தொடங்கப்பட்ட ஆண்டு எது?

விடை :1923

4. மாணவர்களுக்கு இரண்டு கைகளாலும் எழுதப்பயிற்சி தரும் நாடு எது?

விடை : ஜப்பான்

5. உலகச் சுற்றுச்சூழல் தினம் எது?

விடை : ஜூன் 5

6. ஒலிம்பிக் கொடி எந்த ஆண்டில் தயாரிக்கப்பட்ட்து?

விடை : 1920 ஆம் ஆண்டு

7. குஜராத்தில் உள்ள புகழ் பெற்ற நடனம் எது?

விடை : தாண்டியா

8. நாய்க்கு உள்ள மொத்த பற்கள் எத்தனை?

விடை : 42 பற்கள்

9. உலகின் இரண்டாவது பெரிய நாடு எது?

விடை : கனடா

10. அமிலங்களின் சுவை என்ன?

விடை : புளிப்பு

செ.ரஞ்சனி

இளங்கலைத் தமிழ் முதலாமாண்டு

# விடுகதை

1. பேருந்தைப் பின்னால் தள்ளினால் என்ன ஆகும் ?

   விடை : பின் உடைந்துவிடும்

2. விடிய விடிய பூந்தோட்டம் விடிந்து பார்த்தால் வெறுந்தோட்டம் ?

   விடை : நட்சத்திரம்

3. அயோத்தி நாட்டிலேயே தன்னந்தனி இராமன் ?

   விடை : பனைமரம்

4. சாப்பிட முடியாத பன் எது ?

   விடை : ரிப்பன்

5. நடக்க முடியாத மான் எது ?

   விடை : அந்தமான்

6. இராவணன் தங்கைக்கு முதுகிலேயே மூனுகோடு ?

   விடை : அணில்

7. பெட்டிக்குள் முத்து அது என்ன ?

   விடை : நிலக்கடலை

8. வெள்ளை வெற்றிலை கறுப்பு பாக்கு அது என்ன ?

   விடை : கண்

9. கறுப்புச் சட்டைக்காரன் காவலுக்குக் கெட்டிகாரன் அவன் யார் ?

   விடை : பூட்டு

10. தலையைச் சீவினால் தாகம் தீர்ப்பான் அவன் யார் ?

    விடை : இளநீர்

அ. கோகிலா

இளங்கலைத்தமிழ் மூன்றாமாண்டு

## தைத்திருநாள்

மார்கழி கழிய
போகியின் இருட்டை ஒழித்து
தை மகள்
விவசாயிக்கென பிறந்தாள்
தைத் திருநாள்
வேர்வை உரமாக்கி
வெயில் குளிர் பாராது
பாடுபட்டு உழைத்த
உழவனுக்கு
உகந்த நாள்
கால்நடைக்கு
நன்றி சொல்லி
சீறிவரும் காளையை
திமிருடன் அடக்கும்
தமிழர் திருநாளிது
விவசாயி மகிழ்ந்து
கொண்டாடும்
தைத் திருநாளிது !

சி.வினிதா
இளங்கலைத்தமிழ் மூன்றாமாண்டு

## தைத்திருநாள்

தைத் திருநாளை
தயங்காமல் வரவேற்க
தமிழர்களோ நாம் இங்கே

தலைநிமிர்ந்து தான் நிற்க
காலையில் கண் விழித்து
கண்ணெதிரில் கதிரவன் உதித்து
வானவில்லின் வண்ணம் வைத்து
வாசலில் நான் கோலமிட
உழவனைப் போற்றும் பெருநாள்
உழவனுக்கு இதுவே திருநாள்

சீறி வரும் காளைகளை
சிறப்பாய் அடக்கும்
காளையர் தான்
பாரம்பரிய உடை அணிந்து
பார்க்க வரும்
பாவையர் தான்
புதுப்பானை நிறையட்டும்
புதுமைப் பொங்கல் பொங்கட்டும்
பொங்கி வரும் பொங்கலைக் கண்டு
பொங்கலோ பொங்கல் என்று
தித்திக்கும் பொங்கல்
தினம் தோறும் வருக.

ந.திவ்யா

இளங்கலைத்தமிழ் மூன்றாமாண்டு.

## எனது கனவுப் புத்தாண்டு

எனது கனவுப் புத்தாண்டு
பழைய

எண்ணத்திலும் கவலையிலும்
கட்டுப்பட்டு கிடந்த
கடந்த காலத்திலிருந்து
மீட்டெடுக்க வந்த
எனது கனவு புத்தாண்டிற்கு
எனது இனிய வரவேற்புகள்!!

ஏற்றப்பட்ட விளக்கு
அணைக்கப்பட்ட இருள்
என அனைத்து
இன்பத் துன்பங்களையும் தாண்டி
புதிய பயணத்தைத்
தொடங்குவது தான் புத்தாண்டு
இனி வரும் காலங்களில்
பூக்களையும் பூகம்பங்களையும்
நோக்கிச் செல்லும்
முதல் நாள் புத்தாண்டு

புத்தாண்டின்
புதிய வருடத்தில்
புதிய சிந்தனைகளையும்
கொள்கைகளையும்
தோற்றுவிக்கும் புத்தாண்டு
கனவுப் புத்தாண்டாக காட்சிப்படுத்தும்
அழகிய பூமியையும் புதுப்பிக்கும்
இனி வரும் காலத்தில்
பொழியட்டும் அன்பின் மொழி

மொழியட்டும் தாயின் மொழியான
தமிழ் மொழி
இப் புத்தாண்டிலாவது
பெருகட்டும் கல்வி நிலை
கல்வி நிலை பெருகினால்
செல்வ நிலை பெருகி
ஏழ்மை நிலை மாறட்டும்
அடிமைப் பெண் என்ற நிலை
புதுமைப் பெண் என மாறட்டும்
காலையில் தோன்றும்
கதிரவனைப் பாடி
கதிரவனிடம் பாடி
கதிரவனிடம் கடன் வாங்கும்
பிறை நிலவைப் போற்றிப்
பிறக்கட்டும்
எனது கனவுப் புத்தாண்டு...

கோ.தமிழ்ச்செல்வி
இளங்கலைத் தமிழ் மூன்றாமாண்டு

விடியல் மாத இதழ்